பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 81331 ★ 1953 ★ விலை ? காசு ★ தலைநகரில் 10 காசு

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : சித்திரை 4 (16—4—68) செவ்வாய் ★ வெளியூர் : சித்திரை 5 (17—4—68) புதன் [இதழ் : 253

## இராபர்ட் கென்னடி—அண்ணா சந்திப்பு

சென்னை, ஏப். 15—

அண்ணா அவர்கள், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சனை மட்டுமன்றி, குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடவிருக்கும் இராபர்ட் கென்னடியையும் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

# ரோம் நகருக்குச் சென்றார் அண்ணா

## பம்பாய் விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு

### மாராட்டிர அமைச்சர் வரவேற்றார்— மாநில ஆளுநர் விருந்தளித்தார்

ரோம் ஏப். 16—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா செல்லும் வழியில், இன்று இத்தாலியின் தலைநகரான ரோமுக்கு வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் இந்தியத் தூதுவரக அதிகாரிகளும், இத்தாலிய அரசு அதிகாரிகளும், பொதுமக்கள் பலரும் வரவேற்றனர்.

இத்தாலியின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்க்கும் அண்ணா அவர்கள் பின்னர், போப் அவர்களைச் சந்தித்து உரையாடுவார்.

## பம்பாயில் சிறப்பான வரவேற்பு

### கழகத் தோழர்களின் பெருமிதம்

அண்ணா அவர்கள் நேற்று மாலை சென்னையிலிருந்து பம்பாய் அடைந்தார். அங்கு சாந்தா குரூஸ் விமான நிலையத்தில் அண்ணா அவர்களை வரவேற்க ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும், பம்பாய்வாழ் தமிழ் மக்களும் குழுமியிருந்தனர்.

மராட்டிய மாநில அரசின் சார்பில், மாநில நிதியமைச்சர் திரு. எஸ். கே. வாங் கடே அண்ணா அவர்களை வரவேற்றார்.

மராட்டிய ஆளுநர் டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் சார்பில், அவருடைய மெய்க்காவலர் வந்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றார்.

பம்பாய் தி. மு. க. தோழர்களான எஸ். தியாகராசன், தொ. து. அன்புச்செழியன், த. மு. பொற்கோ உட்பட முன்னணித் தோழர்கள் அனைவரும் வந்திருந்து வரவேற்றனர்.

அண்ணா அவர்கள், மராத்திய ஆளுநர் டாக்டர் பி. வி. செரியன் அவர்களின் விருந்ினராகத் தங்கியிருந்தார். ஆளுநர் மாளிகையில் சில மணி நேரம் ஓய்வெடுத்தபின்; இன்று விடியற்காலை 2-மணியளவில் விமானமூலம் ரோமுக்குப் பயணமானார். அண்ணா அவர்களுடன் தனிச் செயலாளர் திரு. சொக்கலிங்கமும் சென்றார்.

அண்ணா அவர்களுடன் சென்னையிலிருந்து, சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சாவும், தனிச் செயலாளர் திரு. சொக்கலிங்கமும், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன், பாதுகாப்பு அதிகாரி திரு. இராமானுசம் ஆகியோரும் வந்திருநதனர்.

பம்பாய் விமான நிலையத்தில், நுழைவுக் கட்டண ஏற்பாடு ஏப். 14-ஆம் நாள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்தது; இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்த முதல் நாளே (ஏப். 15) ரூ. 3,000-வரை வசூலாயிற்று.

அண்ணா அவர்களை வரவேற்க விமான நிலையத்தில் ஏராளமான கழகத் தோழர்களும், தமிழ் மக்களும் குழுமியிருந்ததே இந்த வசூல் உச்ச நிலையடைந்ததற்குக் காரணம்.

(4-ம் பத்தி தொடர்ச்சி)

தகுதி எப்படி இருக்க முடியுட?

ஆதலால் காங்கிரசார், உடனடியாகத் தாங்கள் பதவிக்கு வர வேண்டுமென்று ஆத்திரப்படுவதைவிட, 'ஆட்சிக்கு மரியாதை இருக்க வேண்டுமே' என்பதில் கவலை கொண்டு தொண்டாற்ற வேண்டியது புத்திசாலித்தனமாகும்!''

## மதுவிலக்கை விலக்கேன்!

### அண்ணாவின் உறுதி

சென்னை, ஏப். 16—

"அடிப்படை ஒற்றுமை நம்மிடையே நிலவுகிறது; சங்கடங்கள் நேரிடும்போது சில சமயங்களில், விளைவுகளை உணராமல் இந்த ஒற்றுமை சீர்குலைக்கப் பட்டுவிடுகிறது!

"என்ன சங்கடங்கள் ஏற்பட்டாலும், ஒற்றுமையைக் கருதி அத்தகைய போக்கிலிருந்து நாம் — தாமதிக்காமல் — திரும்பிவிட முயல வேண்டும்.

"நிதித் தொல்லைகள் என்னவாக இருப்பினும், மதுவிலக்கை நான் நிலைநாட்டியே தீருவேன்! 'மதுவிலக்கு' என்பது, ஒரு வாழும் வழி! இந்தப் பண்புதான், நமது நாட்டுக்கும்—மற்ற நாடுகளுக்குமிடையேயுள்ள ஒரு மூக்கிய வேறுபாடு ஆகும்!''

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற விடுதித் திடலில், மதுவிலக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நடைபெற்ற பிரியாவிடை விருந்தில் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

## சென்னை—மதுரை—கோவை விமானப் போக்குவரத்து

மதுரை, ஏப். 16—

சென்னை — மதுரை — கோவை விமானப் போக்குவரத்து ஒன்று புதிதாகத் துவங்கிற்று.

முக்கியமாக மல்லிகைப்பூ வியாபாரத்திற்கு இடைஞ்சலின்றி இருப்பதற்காகவே இந்தப் போக்குவரத்து நடைபெறுகிறது.

சென்னைக்கு இந்த விமானம் திரும்பி வருகையில், அதில், சென்னையில் விற்பனை செய்வதற்காக சுமார் 700 கிலோ மல்லிகைப்பூ இருக்கும்.

## உ. பி. மாநிலத்திலும் சட்டமன்றக் கலைப்பு

### அறிவிப்பில் கையெழுத்திட்டார் குடியரசுத் தலைவர்

### அடுத்த பிப்ரவரியில்தான் மறுதேர்தல் நடக்கும்

புதுடில்லி, ஏப். 15—

உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்தவேண்டும் என்ற அறிவிப்பில் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டார்.

உ. பி. மாநிலத்தில் மறுதேர்தல் நடத்தவேண்டும்' என்று அந்த மாநிலத்தின் ஆளுநர் தெரிவித்த பரிந்துரை மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டதையொட்டியே, குடியரசுத் தலைவர் இம்முடிவுக்கு வந்துள்ளார்.

கடந்த சில வாரங்களாகவே உ. பி. மாநிலத்தில் அடுத்தடுத்து நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகட்கும், குடியரசுத் தலைவரின் இந்த அறிவிப்பு ஓர் உச்சகட்ட நிகழ்ச்சியாகத் திகழ்கிறது.

இன்று மத்திய அமைச்சரவை இருமுறை கூடி, உ. பி. ஆளுநரின் அறிக்கையை ஆராய்ந்தது; பின்னர், உள்துறை அமைச்சர் திரு. சவாண், குடியரசுத் தலைவரைச் சந்தித்து, அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

"உ. பி.-யில், இடைக் காலத் தேர்தல் நடத்துவது ஒன்றே இருக்கும் வழி'' என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அமைச்சரவைக் கூட்டத்தில் வற்புறுத்தினாராம்.

கடந்த பொதுத்தேர்தலுக்குப் பின், சட்டமன்றம் கலைக்கப்பட்டு மறுதேர்தல் நடக்கவிருக்கும் மூன்றாவது மாநிலமாகும் உத்தரப் பிரதேசம்.

அரியானாவிலும், மேற்கு வங்கத்திலும் சட்டமன்றங்கள் ஏற்கனவே கலைக்கப்பட்டிருக்கின்றன.

உ. பி. மாநிலத்தில் எப்படியும் அடுத்த ஆண்டு பிப்ரவரியில்தான் தேர்தல் நடக்கும் என்று கருதப்படுகிறது; அதுவரை குடியரசுத் தலைவர் ஆட்சிதான் அங்கு நிலவும்.

## காலித்தனத்தைக் கைவிடுக!

### காங்கிரசாருக்குப் பெரியார் 'புத்திமதி'!

சென்னை, ஏப். 15—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், தமது 'விடுதலை' இதழில், 'நாட்டை ஆளக் காங்கிரசுக்குத் தகுதி இல்லை' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில், இன்றைய காங்கிரசுக்காரர்கள், எத்தகைய இழிசெயல்களிலெல்லாம் ஈடுபடுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டி, இனியேனும் நிலைமையுணர்ந்து, திருந்தி நடக்குமாறு புத்திமதி கூறியுள்ளார்; அவர் எழுதியுள்ள தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:—

பொதுத்தேர்தல் வர இன்னும் நான்கு ஆண்டுகள் இருக்கின்றன; அப்படி நாலாண்டு கழித்தபின் வரும் தேர்தலிலாவது காங்கிரசு பதவிக்கு வருமா என்பது 100-க்கு 51 பங்கு சந்தேகம் என்றுதான் சொல்லவேண்டும்.

காங்கிரசின் கைக்கு மறுபடியும் பதவி வந்தாலும, 'காங்கிரசினால் ஆள முடியுமா' என்றால், கண்டிப்பாய் முடியாது என்பதுடன், இன்றைய நிலையைவிட கேடான அராஜகத் தன்மையில்தான் ஆள வேண்டிவரும்!

இன்று காங்கிரசின் வேலை காங்கிரசல்லாத மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி பிடிப்பதும், காலித்தனம் செய்து கலகமுண்டாக்கிக் காங்கிரசல்லாத ஆட்சியின் மீது பழி சுமத்துவதுமே தேசியத் தொண்டு வேலையாக ஆகிவிட்டது!

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்தப் பருவத்தை, 'காலிகள், தங்களைக் கனவான்களாக ஆக்கிக்கொள்ளும் பருவம்' என்றுதான் சொல்லவேண்டும்; 'கனவான்கள் தங்களை மறைத்துக் கொள்ளும் பருவம்' என்றும் தான் சொல்ல வேண்டும்!

காங்கிரசுக்காரர்கள், மற்றவர்கள் ஆட்சியைக் கவிழ்த்துப் பதவிக்கு வர முயற்சிப்பதன் பலன், 'நாளை ஒருசமயம் காங்கிரசு பதவிக்கு வர நேர்ந்தால் அதை எப்படிக் கவிழ்ப்பது' என்பதை மற்றவர்களுக்குக் காங்கிரசு கற்றுக்கொடுத்ததாகத்தானே முடியும்!

இதை உணர்ந்துகொள்ளச் சக்தி—அறிவு இல்லாத காங்கிரசு, நாளைக்குப் பதவிக்கு வந்தாலும், அதற்கு நாடாளும்

(1-ம் பத்தி பார்க்க)

## எளியவர்கள் உள்ளங்களில் ஒளிவிடாத சுதந்தரம்!

சென்னை, ஏப். 15—

"மதுவிலக்கைச் செயற்படுத்துவதில் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள், முன்னின்று வழிகாட்ட வேண்டும்.

"மதுவிலக்கு இன்றி ஏழை மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்க இயலாது! ஏழை எளியவர்களின் உள்ளங்களில் ஒளிவிடாத சுதந்தரம், சுதந்தரமே அன்று!

"'பணக்காரர்கள் குடிக்கும்போது, நாங்கள் மட்டும் ஏன் குடிக்கக் கூடாது? என்று அந்த ஏழை எளியவர்கள் கேட்கின்றனர்; எனவே, மதுவிலக்கை அனைத்து மக்களுக்கும் செயல்படுத்த வேண்டும்''

இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார், மதுவிலக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நடைபெற்ற பிரிவுபசார விருந்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 4 (16—4—68) செவ்வாய்


## கழக அரசும் மதுவிலக்கும்

"மதுவிலக்கு, ஒரு வாழ்க்கை முறை; அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டோம்; மாநில அரசின் அமைப்பு எவ்வாறு இருந்தாலும், மதுவிலக்குக் கொள்கை தொடர்ந்து அமுலாக்கப்படும்.

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனமில்லை.

"சென்னையில் ஒரு பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு மதுவைப் பற்றி ஒன்றுமே தெரியாது. குடித்துவிட்டு வீதிகளில் ரகளை செய்யும் காட்சிகளையும் அவர்கள் கண்டதில்லை."

தமிழகத் தலைநகரில் நடந்த நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், மேற்காணும் கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மதுவிலக்கு இலட்சியத்தைக் குறித்து, 'சிறந்த சனநாயக அரசியல் அமைப்பு' என்ற முறையில் முன்னேற்றக் கழகமும், 'அக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்ற அரசு' என்ற முறையில் தமிழக அரசும் கொண்டிருக்கின்ற முடிவைத்தான் முதலமைச்சர் அவர்கள் தெள்ளத்தெளிய அறிவித்திருக்கின்றார்கள்.

'மதுவிலக்கு தோல்வி கண்டுவிட்டது' என அங்கலாய்த்துக் கொள்ளுகின்றவர்களும், 'மதுக் குடியினால் கிடைத்திடக்கூடிய பெரிய வருமானத்தை அரசு இழந்துவிட வேண்டுமா' என ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பவர்களும், முதலமைச்சரின் இக்கருத்துரையில் கடைசி இரண்டு வரிகளில் கூறியிருப்பதை—இன்றையப் பரம்பரையினர் கண்ணாரக் காண்பதற்கு வாய்ப்புப் பெற்றில்லாத விரும்பத்தகாத அவலக் காட்சியை—தங்கள் கருத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், மதுவிலக்கினால் இன்றையச் சமுதாயமும், எதிர்காலச் சமுதாயமும் பெற்றிருக்கின்ற நல்விளைவுகளைப் பற்றிய உண்மையை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டை, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்துப் பேசும்பொழுது, தமிழக அரசு மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்துகின்ற காரணத்தினால். 'அத்திட்டத்தால் ஏற்படக்கூடிய இழப்பை ஈடுசெய்ய இந்திய அரசு நிதி உதவி செய்தல் வேண்டும்' என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இவ்வாறு நிதியுதவி கோரியதற்காக முதலமைச்சர் அவர்கள், அரிய விளக்கம் ஒன்றையும் தந்துள்ளார்கள்; அதாவது, 'காங்கிரசு அல்லாத அரசு நடக்கும் இங்கு—தமிழ்நாட்டில், பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கிடையேயும் மதுவிலக்குச் செயல்படுத்தப்படுகிறது; மக்கள் சமுதாய நலனைக் கருதி இக்கொள்கையை உறுதியுடன் பின்பற்றிவரும் தமிழக அரசுக்கு, மத்திய அரசு அவசியம் பொருளுதவி செய்ய முன்வர வேண்டும்; முழு அளவு பொருளாதார **உதவி** செய்ய முடியாமற்போனாலும், **குறைந்தபட்சம், 'மதுவிலகை இன்னும் திறமையாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான அதிகப்படி போலீசுக்கு ஆகும் செலவையும், உஷாராகக் கண்காணிக்கத் தேவைப்படும் 'கண்காணிப்பு'ப் படைக்கு ஆகும் செலவையும்—ஆக இந்த இரண்டு செலவுகளையேனும் ஏற்றுக்கொள்ளும் அளவில் மத்திய அரசு பொருளுதவி செய்து 'நல்ல பெயர்' சம்பாதித்துக்கொள்ளுவது நல்லது"** என முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தொடர்பில் மற்றொன்றையும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்; அதாவது, 'காங்கிரசுக் கட்சியால் ஆளப்படுகின்ற மாநிலங்களில் மதுவிலக்கை ஒழித்துவிட மத்திய அரசு ஆதரவு தந்திருக்கிறது; இவ்வாறு ஆதரவு தந்திருப்பதன் காரணமாக, மத்திய அரசுக்கு இருந்த நல்ல பெயரில் ஒரு பகுதியை இழந்துவிட்டிருக்கிறது; அந்த இழந்துவிட்ட பகுதியை ஈடுசெய்துகொள்ள மத்திய அரசு முன்வர வேண்டும்' எனக் கோரியுள்ளார்.

இழந்துவிட்டிருக்கின்ற நல்ல பெயரின் ஒரு பகுதியை இந்திய அரசு எவ்வாறு ஈடு செய்துகொள்ள வேண்டும்?—ஈடு செய்துகொள்ள முடியும்?

இதற்காக, முதலமைச்சர் கோடிட்டுக் காட்டியுள்ள முறை இதுதான் :—

> **"மக்களின் நல்வாழ்வுக்காகவும், அதுபற்றி அரசியல் சட்டத்திலேயே குறிப்பிட்டுள்ள கொள்கையின்படியும் நடந்துவரும் தமிழக அரசுக்கு மத்திய அரசு உதவி செய்ய முன்வருவதன் மூலம் இழந்த இந்த நல்ல பெயரை மீட்டுக்கொள்ள முடியும்."**

இதே மாநாட்டில் கலந்துகொண்ட முன்னாள் தமிழக முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்களும், மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாகத் தமிழக அரசு செயல்படுத்திவருவதைக் கருத்தில் கொண்டு, 'மத்திய அரசு, நிதி உதவி செய்ய முன்வர வேண்டும்' எனக் கூறியிருக்கின்றார்; 'தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையை நினைவில்கொண்டு, கூடுதலான நிதியைத் தமிழக அரசுக்குக் கொடுக்கும்படி, இந்திய அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும்' என, நிதிக் குழுவுக்கும் நல்லுரை கூறியிருக்கின்றார் பக்தவத்சலனார்.

முன்னாள் முதலமைச்சரும் — இந்நாள் முதலமைச்சரும் கருத்தொருமித்து, இந்திய அரசை நிதியுதவி செய்யுமாறு கோரியுள்ளனர். இந்திய அரசு எப்படி நடந்துகொள்ளப்போகிறது என்பது, இனிமேல்தான் தெரியவேண்டும்.

அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கிறது என்பதற்காக, மதுவிலக்கில் பொதிந்திருக்கின்ற வாழ்க்கை இலட்சியத்தைச் சீரழிக்க நமது முதலமைச்சர் கனவிலும் கருதமாட்டார் என்பது உண்மையிலும் உண்மையாகும். இதுபற்றிய தமது உள்ள உறுதியைப் பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார் :—

"மதுவிலக்கை ரத்து செய்ததன் காரணமாக 11 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று மைசூர் மாநில அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார்; எனக்குக்கூட '11 கோடி ரூபாய்' என்பது மிகுந்த 'வசீகர'மாகத்தான் இருந்தது; ஆனால் மறுகணமே—மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால் அதன் விளைவாக—கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும், அழுது கதறும் குழந்தைகளின் உருவங்களும் என் கண்முன் காட்சி அளித்தன; அக்கணமே இந்த 'வசீகர' 11 கோடி ரூபாய்க்கு 'டாடா' சொல்லிவிட்டேன்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்திருப்பதன் மூலம், மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்திவருவதில் தமிழக அரசுக்குள்ள உறுதிப்பாட்டை ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்துள்ளார்.

—கா. க.

## முதலமைச்சர் இலாகாக்கள் ஒதுக்கீடு

சென்னை, ஏப். 15—

முதலமைச்சர் அண்ணா அவர்கள் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்வதையொட்டி, அவருடைய இலாகாக்களின் பொறுப்புக்கள் மற்ற அமைச்சர்களிடம் தரப்பட்டுள்ளன; மாறுதல்களாவன :—

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் :—போலீசு, மதுவிலக்கு.

பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி :—(ஐ.சி.எஸ்., ஐ ஏ.எஸ். அதிகாரிகள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மேல்மட்ட அதிகாரிகள் சம்பந்தப்பட்டவை); தேர்தல்.

சட்ட அமைச்சர் செ. மாதவன் :—நிதி, திட்டம்.

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் :—கடல்கடந்த இந்தியர்கள், அகதிகள் நலம், உணவு உற்பத்தி.

உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி :—சீரணி, சமுதாய நலத் திட்டம்.

## அமெரிக்கத் தலைவரை அறிஞர் அண்ணா சந்திப்பார்

சென்னை, ஏப். 15—

கேள்வி :—" தாங்கள், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சனை சந்திப்பீர்களா ?"

அண்ணா :—" ஆம்; சந்தித்து உரையாடுவதற்கு முயலுவேன்."

—செய்தியாளர் கூட்டத்தில்

## 'சில குறிக்கோள்களுடன் அமெரிக்க மாநிலங்கட்கு செல்வேன்'

### 'தென்னகத்தில் மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவேன்'

### 'கான்சாஸ் மாநிலத்தின் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை நேரில் பார்த்து அதன் நுட்பங்களைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பேன்' --- முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஏப். 15—

"நான், பல அமெரிக்க மாநிலங்களுக்குப் போவதாக இருக்கிறேன்; ஒவ்வொரு மாநிலத்தையும், குறித்த நோக்கத்துக்காக —குறித்த அக்கறைக்காகப் பார்க்கப் போகிறேன்.

"உதாரணமாக, கான்சாஸ் மாநிலத்துக்குச் செல்வது, அங்குள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை நேரில் கண்டறிந்து அதன் நுட்பங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பேன்.

"அமெரிக்காவிலுள்ள 'ஜெனரல் மோட்டார் தொழிற்சாலை' நிர்வாகம், என்னை அங்கு வரும்படி அழைத்திருக்கிறது; அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்நிறுவனத்தைச் சென்று பார்வையிடுவேன்; பெரிய மண்வாரி இயந்திரங்களை (இயந்திரக் கலப்பை) உற்பத்தி செய்யும் மிகப் பெரிய நிறுவனங்களில் அது ஒன்றாகும்: சென்னையில் மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை அமைப்பதைப்பற்றி அந்நிறுவனத்துடன் ஆலோசிப்பதாக இருக்கிறேன்; ஓர் இந்திய நிறுவனத்தின் கூட்டுறவுடன் அதனைத் தமிழ்நாட்டில் நடத்த இயலுமா என்பதைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவேன்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்குமுன் செய்தியாளர்களிடம் உரையாடுகையில் குறிப்பாகத் தெரிவித்தார்.

## 'அமைச்சரவைத் தோழர்களின் நிர்வாகத் திறமையில் அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது'

### ஒத்துழைப்புத் தருமாறு அண்ணா வேண்டுகோள்

"ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகே அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டேன். நான் ஒரு மாத காலம் வெளிநாட்டில் இருக்கும்போது எனது அமைச்சரவையிலுள்ள தோழர்கள், நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்துவதாக எனக்கு வாக்களித்துள்ளனர். அவர்களது திறமையில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

"நான் வெளிநாட்டில் இருக்கும்போது, இங்கு எப்போதும்போல் நல்ல முறையில் விவகாரங்கள் நடந்துவரும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

"என்னுடைய தோழர்களுக்கு நல்ல முறையில் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சித் தோழர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

"சிறப்பான வேண்டுகோள் ஒன்று பத்திரிகையாளர்களுக்கு விடுக்கிறேன்; எனது வெளிநாட்டுப் பயணத்தின்போது, எனது தோழர்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமாய்ப் பத்திரிகையாளரைக் கேட்டுக்கொள்கிறேன்.

"எனது அமைச்சரவைத் தோழர்கள் மீதுள்ள நம்பிக்கையின் பேரில்தான் நான் வெளிநாட்டில் உற்சாகமாக இருக்கப்போகிறேன்.

"நான் வெளிநாடு சென்றாலும், என் அமைச்சரவைத் தோழர்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டிருப்பேன்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

## ஜப்பானில் தொழில் திட்டங்கட்கு உதவி பெறுவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவேன் !

"ஜப்பானில் தங்கியிருக்கையில் சேலம் இரும்பாலைத் திட்டத்துக்கு உதவி பெறும் நிலை குறித்து அறிய முயற்சிப்பேன்.

அங்கு ஐந்து நாட்களுக்கு அரசின் விருந்தினராக இருக்கும்போது, பல தொழில் நிறுவனங்களுக்குச் செல்ல இருக்கிறேன்.

இரும்பாலைத் திட்டம்—மீன்பிடி படகுத் துறைத் திட்டம்—தூத்துக்குடியில் இரசாயனத் தொழிலுக்கு உதவி பெறுவது—ஆகியவை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவேன்."

## காங்கிரசு அமைச்சரின் வேதனை!

"திறமையோடு உழைக்கிற—தன்னலமற்ற அதிகாரிகளுக்கு, கருநாடக மாநிலத்தில் இடமில்லை"

என்று மாநில அமைச்சர் தேவராஜ ஹர்ஸ் கூறியிருக்கிறார்,

**"ஆனந்த் பால் பண்ணை மிகத் திறமையோடு இயங்குவதற்கு டாக்டர் குரியன் என்ற அதிகாரியின் உழைப்புதான் காரணம்; இவரைப் போன்ற அதிகாரிகளை வெளியிலிருந்து தருவித்தால், ஆளுங்கட்சியையும், எதிர்க் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடத்தி அவர்களை இங்கே தங்கவிடாமல் செய்துவிடுகிறார்கள்"**

என்றும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார்.

# ‘ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகே அமெரிக்க அழைப்பை ஏற்றேன்’

## ‘பயனுள்ள பல விவரங்களை அறிந்துவருவேன்’

### வெளிநாடு செல்லுமுன் அறிஞர் அண்ணா தந்த விளக்கம்

சென்னை, ஏப். 15—

“என்னுடைய பயணத்தின் முக்கிய நோக்கம், பல்கலைக் கழகக் கல்வியும், விவசாயமும், அதற்கடுத்தாற்போல் தொழிலும் எந்த முறையில் நடைபெறுகின்றன என்பதைப் பார்ப்பதுதான்.

“கல்வித் துறையில் என்னென்ன வசதிகள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தரப்படுகின்றன—ஆசிரியர்கட்கும் மாணவர்கட்குமுள்ள நட்புறவுகள் என்னென்ன--என்பவற்றைக் கவனித்திடவும் ஆராய்ந்திடவும் நான் எண்ணியிருக்கிறேன்”

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் உலகச் சுற்றுப்பயணத்திற்குப் புறப்படுவதற்குமுன், செய்தியாளர்களிடம் உரையாடுகையில் தெரிவித்தார்.

#### கருத்தரங்குகளில் கலந்துகொள்வேன்

நான், ‘யேல்’ பல்கலைக்கழகத்திற்குச் செல்லவிருக்கிறேன். அந்தப் பல்கலைக்கழகத்திற்கு என்னை வருமாறு அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் நான்கு மாதங்களுக்குமுன் அழைத்தார்கள்.

‘யேல்’ பல்கலைக்கழகத்தில் ஐந்து நாட்கள் தங்குவேன்; அங்கு நடைபெறும் கருத்தரங்குகளில் கலந்துகொள்வேன்; அங்கு நான் சில சொற்பொழிவுகளையும் நிகழ்த்தவிருக்கிறேன்.

#### பல்கலைக்கழகங்கள் அழைப்பு

அமெரிக்காவிலுள்ள மற்ற பல்கலைக்கழகங்களிலிருந்தும் எனக்கு அழைப்புக்கள் வந்திருக்கின்றன. அமெரிக்கா சென்ற பிறகு அதுபற்றி யோசித்து விவரங்கள் தயாரிக்கப்படும்.

#### ஹாவாய் தீவில்...

“நான் ஹாவாய் தீவுக்குச் செல்லுகையில், அங்கு கிழக்கு—மேற்கு கலாச்சார நிலையத்தில் பேச இருக்கிறேன்.

#### ரோம் நகரில்...

ரோம் நகரில் போப் அவர்களைச் சந்தித்துப் பேச இருக்கிறேன். நாளை மறுநாள் (17-ம் தேதி) அவரைச் சந்தித்துப் பேசுவேன்.

#### ‘யுனெஸ்கோ’வில்...

பாரிசில் ஐ. நா. நிறுவனத்தின் கிளைக்கழகமான ‘யுனெஸ்கோ’வில் தங்க இருக்கிறேன்; அதன் பொதுச்செயலாளர் மால்கம் ஆதிசேஷய்யா ஒரு விருந்து தரவிருக்கிறார். பாரிசில் அடுத்த உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கிறது; அதுபற்றியும் அவருடன் ஆலோசனை நடத்தவிருக்கிறேன்.

#### தவறான தகவல்--- தெரிவித்தும் விட்டேன்

கேள்வி:— “தாங்கள் வெளிநாடு சென்றால் டெலிவிஷன் பேட்டியையும், பத்திரிகையாளர் பேட்டியையும் ‘வேண்டாம்’ என்று சொன்னீர்களாமே?”

அண்ணா:—“இதை யார் உங்களுக்குச் சொன்னது?”

நிருபர்:— “சி. சுப்பிரமணியம் சொல்லியிருக்கிறார்.”

அண்ணா:—“அவரிடமே நேரில் நேற்று நான், ‘உங்களுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது’ என்று கூறிவிட்டேன்; எங்கு சென்றாலும், ‘செய்தியாளர் பேட்டி’ என்பது தவிர்க்க முடியாதது ஆயிற்றே! நான் அதை வரவேற்பவனாயிற்றே!”

#### நேரம் ஏது? எனவே ‘வேண்டாம்’ என்றேன்

கேள்வி:—“பம்பாயில் ஏதாவது நிகழ்ச்சிகள் உண்டா?”

அண்ணா:—“பம்பாயில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய இருந்தார்கள்; போதுமான காலம் இல்லாததால், ‘வேண்டாம்’ என்று கூறிவிட்டேன்; எனினும், மாநாட்டிர கவர்னர் செரியனின் விருந்தினராக சில மணி நேரம் தங்க இருக்கிறேன்.

#### தலைமையமைச்சர் கூறியது என்ன?

கேள்வி:—“இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி என்ன கூறவிருக்கிறீர்கள்?”

அண்ணா:—“நான் சில நாட்களுக்குமுன் தலைமையமைச்சர் இந்திராவுக்கு இதுபற்றி ஒரு கடிதம் எழுதினேன். “எங்களுக்கும் இந்திய அரசினருக்கும் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ பொதுவான கருத்து ஒற்றுமை இருக்கிறது; பல நாட்டுப் பிரச்சினைகள் பற்றி அரசாங்கத்தின் கருத்தை அறிய விரும்புகிறேன்” என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தேன்; அந்தக் கடிதத்திற்குத் தலைமையமைச்சர் பதில் எழுதியிருந்தார்; சில நாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிய யோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவித்தார்; பிற நாட்டுக்கும்—நமக்கும் உள்ள உறவின் முறையைப் பற்றியும் விவரமாக எழுதியிருந்தார்.”

கேள்வி:— “கூட்டுசேராக் கொள்கை பற்றி இந்திரா குறிப்பிட்டிருந்தாரா?”

அண்ணா:—‘அவருடைய கடிதத்தின் முதல் வாசகமே அந்தச் சொல்லிலிருந்துதான் துவங்குகிறது.”

#### வியட்நாம் பிரச்சினை

கேள்வி:—“அமெரிக்காவில் வியட்நாம் பற்றிக் கேட்பார்களே?”

அண்ணா:—“அமெரிக்காவிலேயே வியட்நாம் பிரச்சினை இறுதிக் கட்டத்தில் இருப்பதாக உணரப்படுகிறது. இந்தப் பிரச்சினைபற்றி இந்திய அரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது; ‘வியட்நாம் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கூடாது’ என்பது நமது யோசனை. அமெரிக்கக் குடியரசுத் தலைவரே சமாதானப் பேச்சுகளைத் துவக்க முன் முயற்சி எடுத்துவருகிறார்; சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்முயற்சியை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன் மேற்கொண்டுள்ள தருணத்தில் நான் அமெரிக்கா செல்வது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.”

#### மரபுகள்படி நடப்போம்!

கேள்வி:—“தாங்கள் வெளிநாட்டில் இருக்கும்போது இங்கு தற்காலிக முதலமைச்சர் என்று யாரையாவது நியமித்திருக்கிறீர்களா?”

அண்ணா:—“அப்படி ஏதும் இல்லை; ஆனால் அதற்குப் பதிலாக எங்களுக்குள் சில மரபுகள் இருக்கின்றன; அதன்படி நடப்போம்!”

#### பரிசுப் பொருட்கள்

கேள்வி:—“தாங்கள் அமெரிக்காவுக்கு என்னென்ன பரிசுகளைக் கொண்டு செல்கிறீர்கள்?”

அண்ணா:—“ஆங்கிலத்திலுள்ள திருக்குறள்—தொல்காப்பியம்—கருணாநிதி எழுதிய சிலப்பதிகாரம—வேலைப்பாடு மிக்க மரச் சாமான்கள்—காஞ்சிபுரம் பட்டுக் கைக்குட்டைகள்—நாகரிகப் பாணியில் தலையை மூடும் சிறிய குட்டைகள் இவற்றைக் கொண்டுச் செல்கிறேன்.”

கேள்வி:—“தங்கள் வெளிநாட்டுப் பயணத்தின் மூலம் தமிழகத்தின் — இந்தியாவின் பெருமையை உணர்த்துவீர்களா?”

அண்ணா:—“நிச்சயமாக! நமது நாட்டின் பெருமையை—கௌரவத்தை உயர்த்தும் முறையில்தான் நடந்துகொள்வேன்.”

#### எந்த உடையில்?

கேள்வி:— “வெளிநாட்டிற்குத் தாங்கள் எந்த உடையில் செல்வீர்கள்?”

அண்ணா:—“சாதாரண உடையில்தான்; சில மாநிலங்களில் குளிர் இருப்பதால் வெப்பம் தரும் உடைகளைக் கொண்டு செல்கிறேன்.”

#### கருத்து வேற்றுமைக்கு உரியது என்றாலும்!

கேள்வி:—“தாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை’ காண விரும்புகிறீர்கள்; அதை எப்படி வெளிநாட்டில் விளக்குவீர்கள்?”

அண்ணா:—“மொழிப் பிரச்சினை, கருத்து வேற்றுமைக்கு உரியது; அதை விளக்கவேண்டி வந்தாலும் நமது நாட்டின் கௌரவத்திற்கு உட்பட்ட எல்லையில் அதை விளக்குவேன்.”

#### இலட்சியம் பற்றி எடுத்துக் கூறுவேன்

ஒரு கூட்டாட்சி அமைப்பு காண நாங்கள் உழைத்துவருகிறோம் என்பதையும், கடந்த 20 ஆண்டுக்கால அனுபவத்தில் சில மாறுதல்களின் தேவை உணரப்பட்டுள்ளது என்பதுபற்றியும் நான் அமெரிக்கர்களுக்கு எடுத்துக் கூறுவேன். மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் இடையே நிதி, மற்றும் அதிகாரம் இவற்றில் உள்ள பங்கு பங்கீடு பற்றியும் நான் விளக்க இருக்கிறேன்.

#### கட்சியின் வரலாறு பற்றிக் கேட்டால்...

எனது கட்சியின் வரலாறுபற்றி அவர்கள் கேட்டால், நான், எனது கட்சி பிரிவினைபற்றிப் பேசியதையும், அந்தப் பிரிவினையைக் கைவிட்டதையும், அதன் பிறகு ஒற்றுமைக்காகப் பாடுபடுவதையும், அந்த ஒற்றுமை பலப்படுவதற்கு சில யோசனைகளைக் கூறிவருவதையும் எடுத்துரைப்பேன்.

#### தவறான வழியில் செல்லுமானால்---

கேள்வி:— “மதுரையில் தமிழர் படை அமைத்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறதே—அதுபற்றி உங்கள் கருத்து என்ன?”

(4-ம் பக்கம் பார்க்க)

# ‘அண்ணாவின் ஆங்கிலப்புலமை கண்டு அமெரிக்காவே திகைக்கும்’

## ‘தமிழகத்தின் பெருமையை உயர்த்தச் செல்கிறார்’

### வழியனுப்பு நிகழ்ச்சியில் தலைவர்கள் பாராட்டுரை

மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குத் தமிழக அமைச்சரவை சார்பில் 14-4-68 அன்று மாலை நடைபெற்ற வழியனுப்பு நிகழ்ச்சியில், ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், மேலவைத் தலைவர் மாணிக்கவேலர், சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார், திரு. ம. பொ. சிவஞானம், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் ஆகியோர் அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசியதும், அமைச்சர் கருணாநிதி அவர்கள் நன்றியுரைத்துப் பேசியதும் வருமாறு:—

#### சர்தார் உஜ்ஜல் சிங்

விழாவுக்குத் தலைமை ஏற்று ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ளும் அமெரிக்கச் சுற்றுப் பயணம் வெற்றிகரமாக முடியவும், அதன்மூலம் நம் நாட்டின் புகழ் ஓங்கவும் வாழ்த்துகிறேன்; அவருடைய அயல்நாட்டுச் சுற்றுப்பயணம் வெற்றிகரமாக நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.”

#### மாணிக்கவேலர்

சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. எம். ஏ. மாணிக்கவேலர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“தங்களின் ஆங்கிலப் புலமை கண்டு அமெரிக்கர்களே திகைக்கப்போகிறார்கள்.

‘யேல்’ பல்கலைக் கழகத்தின் பட்டத்தைப் பெறுவது பெருமைக்குரியதாகும்; அது, தங்களுக்கு மட்டுமல்ல—நாட்டுக்கே பெருமையாகும்.”

#### ஆதித்தனார்

சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

“அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலை இங்கு அடிக்கடி வந்து சென்றுள்ள அமெரிக்கர்களும், இங்குள்ள அமெரிக்கர்களும் நன்கறிந்திருக்கிறார்கள்; அவருடைய ஆங்கிலப் புலமையைக் கண்டு அதிசயித்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்நாட்டிற்கே சென்று, அங்கு அவருடைய அறிவுரை சான்ற நற்கருத்துக்களை—அவருக்கே உரிய சொல்லாற்றல்மூலம்—வெளிப்படுத்த இருக்கிறார்கள்; அது கண்டு, அமெரிக்கா மட்டுமல்ல — அகில உலகமும் அண்ணா அவர்களைப் பாராட்டும்.”

#### ம. பொ. சிவஞானம்

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“தமிழக ஆட்சியின் தலைவராகவும், இந்தியாவின் எதிர்க் கட்சித் தலைவராகவும் நீங்கள் அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்கிறீர்கள்.

ஆளும் கட்சி—எதிர்க் கட்சி ஆகிய இரு கட்சித் தலைவர்களுக்குமுள்ள பண்பாடுகளைக் கொண்டவர்கள் நீங்கள்; தமிழ்நாட்டின் — தமிழின்—தமிழ்க் கலையின் நீண்ட பாரம்பரியத்தை உலகமெலாம் பரப்பிவரச் செல்கின்றீர்கள்!

தமிழ்நாட்டின் பெருமையை உணர்த்தத் தங்களது ஆங்கிலப் புலமை பயன்படும் நேரமிது!

**சொல்லவேண்டிய இடத்தில்—சொல்லவேண்டிய நேரத்தில்—சொல்லவேண்டிய கருத்துக்களை — சொல்லவேண்டியவர் சொல்லப்போகிறீர்! இந்த வகையில் தங்களின் ஆங்கிலப் புலமைக்கு எனது பாராட்டுகள்!**

‘தம்பியுடையான் படைக்கஞ்சான்’ என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது; நீங்கள், நல்ல தம்பிகளை, நாடாளப் பெற்றுள்ளீர்கள்!

எனவே, மகிழ்வோடு சென்று வாருங்கள்! நல்ல தோழமைக் கட்சிகளின் துணையும் தங்களுக்கு உண்டு!”

#### காயிதே மில்லத்

அடுத்து காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் பேசியதாவது:—

“நமது நாட்டின் பெருமையை—பண்பை உயர்த்தி, அதனை நிலைநாட்டி வரும்படியான அறிவாற்றல் பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் செல்வது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் எந்தத் துறையானாலும் நூல்கள்மூலம் படித்து உணருவதைவிட, நேரிலே காணும்போது நாம் பெறும் அறிவு தனிச்சிறப்புடையதாக இருப்பதை உணருகிறோம்.

அப்படிப்பட்ட அனுபவத்தை அறிஞர் அண்ணா அவர்கள் பெற்று வந்து பொதுவாக இந்தியாவிற்கும்—சிறப்பாகத் தமிழ்நாட்டிற்கும் வழங்கும் வகையில் அவரது சுற்றுப்பயணம் வெற்றி பெற வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.”

#### மு. கருணாநிதி

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து அறிஞர் அண்ணா அவர்கள் பேசியபின் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அண்ணா அவர்களே! உங்கள் முகம் காணாமல் ஒரு நாள்—இரு நாள்கூட எங்களால் இருக்கமுடியாது; ஒரு மாதம் பிரிந்திருப்பது என்பது எங்களால் முடியாத காரியம்; எதிர்க் கட்சியாக இருந்தபோது சிறைச்சாலைகூட நம்மைப் பல நேரங்களில் பிரித்ததில்லை.

இந்த ஒருமாத காலமும் தாங்கள் எங்களுக்குப் போதித்த அடக்கம் — அமைதி — அன்பு நெறி ஆகியவற்றை துணையாகக் கொண்டு, தமிழக மக்களின் ஒத்துழைப்போடு பொறுப்புகளை நிறைவேற்றுவோம்!”

# நாவேந்தருக்கு நாடு தந்த பிரியா விடை!

## வரலாற்றுப்புகழ்வாய்ந்த வழியனுப்பு நிகழ்ச்சி!

## மலர் மாரி பொழிந்தது--மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார் அண்ணா

சென்னை, ஏப். 16—

நேற்று அறிஞர் அண்ணா அவர்கள், சென்னையிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணமான காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது ; இதுவரையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எந்த ஒரு தலைவருக்கும் இப்படிப்பட்ட வழியனுப்பு நிகழ்ச்சி நடந்ததில்லை என்று கூறப்படுகிறது.

பல்லாயிரவர் உள்ளங்களின் மகிழ்ச்சிக் கடலுக்கிடையே மலர்மாரியில் சிக்கி அண்ணா அவர்கள் விடைபெற்ற காட்சியைக் காண வாய்ப்புக் கிடைக்காதவர்களும் காணத் திரைப் படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது.

அண்ணா வாழ்க' என்ற வாழ்த்தொலி முழங்க—நாலா பக்கங்களிலிருந்தும் மலர்கள் சொரிய—படமெடுக்க ஒரு பட்டாளமே திரண்டு வந்து முற்றுகையிட—இத்துணைக்கும் இடையே திக்குமுக்காடித் திணறிப்போனார் அண்ணா ! முகம் தெரியாதபடி மலர் மாலைகளால் மறைக்கப்பட்டார் !

மாநில ஆளுநர்முதல் மாநகரின் மதிப்புமிகு பெருமக்கள் பலரும் வந்திருந்து அண்ணா அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

நேற்று காலை 10 மணி முதலே, மக்கள் விமான நிலையம் நோக்கித் திரளத் தொடங்கிவிட்டனர்.

விமான நிலையத்தின் நுழைவாயிலில் ஆயிரக் கணக்கானவர் திரண்டு நின்றனர்.

சாலையின் இருமருங்கிலும் மக்கள் அணிவகுத்து நிற்பதற்காக மரத்தடுப்புகள் கட்டப்பட்டிருந்தன.

விமான நிலையத்தின் உள்ளே முக்கிய பெருமக்கள் அமர்ந்திருப்பதற்காகப் போடப்பட்டிருந்த பந்தலுக்குச் செல்லும் வழியில் சீரணியினர் அணிவகுத்து நின்றனர்.

தேனாம்பேட்டையிலிருந்து மீனம்பாக்கம் வரை மவுண்ட்ரோடின் இருமருங்கிலும் மக்கள் திரண்டிருந்தனர்.

... நிலையத்திற்குள் அனு... வைத்திருந்தோர் ... அனுமதிக்கப்பட்டனர்.

அண்ணா அவர்கள் பிற்பகல் 1-45 மணி... விமான நிலையத்திற்கு வந்துவிட்டார்கள்.

அண்ணா அவர்களின் கார் பந்தலை நெருங்கிக்கொண்டிருக்கையில், விமானக்கூட மாடியின் மீது நின்றிருந்தோர், 'அண்ணா வாழ்க' என முழங்கினர் ; மலர் மாலைகளை வீசினர்.

அங்கிருந்து அண்ணா அவர்கள் திறந்த ஜீப் வண்டியில் பார்வையாளர்கள் குழுமியிருந்த இடத்திற்குச் சென்று கீழே இறங்கி நின்று வாழ்த்தொலிக்கிடையே கைகூப்பி விடை பெற்றுக் கொண்டார்.

அங்கிருந்து, பெருமக்கள் தங்கும் அறைக்குச் சென்றார் ; அங்கே ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், அமெரிக்கத் தூதரக அதிகாரி டாக்டர் ஏ. பி. பிராங்க்ளின், ஜப்பானியத் தூதரக அதிகாரி டி. கிககாவா, செட்டிநாட்டரசர் முத்தையா (செட்டியார்) ஆகியோர் இருந்தனர் ; அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டார்.

பின்னர் விமானத்தளம் நோக்கிப் புறப்பட்டபோது, குழுமியிருந்த கழகத் தோழர்கள் கழக இரு வண்ணக் கொடிகளை ஆட்டி, நற்பயண நல்வாழ்த்து எழுதிய அட்டைகளைக் காண்பித்து, வாழ்த்தொலி எழுப்பிய வண்ணமிருந்தனர்.

அண்ணா அவர்கள், விமானப் படிக்கட்டில் ஏறிய பின்னரும் கூட மாலையணிவிப்பும் 'எலுமிச்சம் பழ வாழ்த்தளிப்பும் ஓயவில்லை ! காவல்துறையினரும், சீரணியினரும் மிகச் சிரமப்பட்டுக் கூட்டத்தினரை ஒழுங்கு படுத்தினர் !

ஆளுநர் உஜ்ஜல் சிங், சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், மேலவைத் தலைவர் மாணிக்கவேலர், மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் ஆகியோர், முறையே மாநிலம்—மாநிலச் சட்டமன்றங்கள் — மாநகரம் ஆகியவை சார்பில் விடை கொடுத்தனுப்பினர்.

மாநில அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே.ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, செ. மாதவன், சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, முத்துசாமி, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, மற்றும் சட்டமன்ற — நாடாளுமன்ற—மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும், மாவட்டச் செயலாளர்களும், கழகத் தோழர்களும், பல்வேறு கிளைக் கழகங்கள் சார்பிலும் மாலைகள் அணிவித்தனர்.

ஏராளமான மாணவர்களும் வந்திருந்தனர் ; மாணவர் தலைவர் சனார்த்தனம் மாணவர் சார்பில் மாலையணிவித்தார்.

வங்கத் தமிழர்கள் சார்பில் வழி அனுப்ப வந்திருந்த வங்கத் தமிழர் சங்கத் தலைவர் திரு. தங்கத்துரை, துணைச் செயலாளர் செ. வீரபத்திரன் இருவரும் மாலையணிவித்து, எலுமிச்சம் பழம் தந்து கைகுலுக்கி வழி அனுப்பினர்.

திராவிடர் கழகச் சார்பில், 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி மாலையணிவித்தார்.

தமக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளையெல்லாம் அண்ணா அவர்கள் கழற்றி மீண்டும் மக்கள் கூட்டத்தின்மீதே வீசி, தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனால் விமானக்கூடமே மலர்க் காடாய்க் காட்சியளித்தது.

விமானம் சரியாக பிற்பகல் 2-40 மணிக்குப் புறப்பட்டது.

அண்ணா அவர்கள் கையை அசைத்து விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

ஆளுநர் உஜ்ஜல்சிங், விமானப் படிக்கட்டுவரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தார்.

### யானை வழியனுப்பிய காட்சி !

அண்ணா அவர்கள் காரில் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் செல்லும் வழியில் சைதாப்பேட்டை மர்மலாங் பாலத்திற்கு அருகில், அதிர்வேட்டுகள் முழங்க சைதைத் தோழர்கள் வரவேற்றார்கள்.

துணை மேயர் பவளவண்ணன், மாநகராட்சி உறுப்பினர்கள் சைதைசம்பந்தம், எம்.கோபால் பாஸ்கரன், மற்றும் 97, 98, 99, 100-வது வட்டக் கழகத் தோழர்கள் கூடிநின்று வரவேற்றனர்.

அங்கே, அண்ணா அவர்கட்கு 'கமலா' என்னும் யானை மாலை சூட்டி வணக்கம் தெரிவித்தது.

வெண்புறுக்கள் பறக்கவிடப் பட்டன.

மகளிர் ஆரத்தியெடுத்து வரவேற்றனர்.

அப்போது வெயிலில் குழுமியிருந்த அனைவருக்கும் மாநகராட்சி உறுப்பினர்கள் நீர்மோர் வழங்கினர்.

பாலத்தையொட்டி பந்தலும் அமைக்கப்பட்டிருந்தது.

### மாணவர் குழு

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில், மாணவர் தனியாகக் குழுமியிருந்தனர்.

'யேல் பல்கலைக் கழகம் செல்லும் ஏந்தலே ! இதயங்களை வென்று வருக !' என்று எழுதப் பட்டிருந்த அட்டைகளை அவர்கள் ஏந்தி நின்றனர்.

---

## வெளிநாட்டுத் தலைவர்கட்கு அண்ணா வழங்கும் பரிசு

சென்னை, ஏப். 16—

போப்பாண்டவரைச் சந்திக்கும் அறிஞர் அண்ணா அவர்கள், அவருக்குத் தமது அன்பளிப்பாகத் திருக்குறள் — தொல்காப்பிய ஆங்கிலமொழிபெயர்ப்பு நூல்களை அளிப்பார்.

அமெரிக்கத் தலைவர் ஜான்சனின் மனைவிக்கு, காஞ்சிபுரம் பட்டுச் சேலையைப் பரிசாக வழங்குவார்.

இத்தகவலை, அறிஞர் அண்ணா அவர்களே செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது :—

### உலகத் தமிழ் மாநாட்டுக் காட்சிகளின் திரைப்படம்

"சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக் காட்சிகள் அடங்கிய திரைப்படச் சுருளையும் எடுத்துச் செல்கிறேன் ; அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் அதனைத் திரையிட்டுக் காட்ட ஏற்பாடு செய்வேன்."

### வியாபாரத் தந்திரத்தையும் மேற்கொள்வேன்

"நான் எடுத்துச் செல்லும் பொருள்களுக்கு வெளிநாடுகளில் 'மார்க்கெட்' பிடிக்க முடியுமா என்ற வியாபாரத் தந்திரத்தையும் மேற்கொள்கிறேன்"

---

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 18--4--68

**பரமக்குடி**

வட்ட தி. மு. க சார்பில் பாராட்டு விழா ; மாலை 7மணிக்கு முத்தாளம்மன் கோயில் முன்னிலையில் ; தலைவர் : தொ. க. சிறைமீட்டான் எம். எல். ஏ.; பாராட்டுப் பெறுவோர் : வே. தங்கபாண்டியன் எம்.எல்.சி., பி. திருஞானசம்பந்தம் எம்.எல்.சி.; பாராட்டுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., எஸ். எஸ். தென்னரசு, வீ. மலைக்கண்ணன் எம். எல். ஏ., தமிழ்க்குடிமகன் எம்.ஏ., நா. நாகலிங்கம், இரா. சு. மணி, கண. முத்துக்கருப்பன், அப்துல் ரகீம், பி. ஆர். சந்திரன்.

**திருவிடைமருதூர்**

தி. மு. க. சார்பில் கோ. சி. மணி எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு ; மாலை 7-மணிக்கு கடைத் தெருவில் ; தலைவர் : க. மகாலிங்கம் ; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கோ.சி. மணி எம்.எல்.சி., சு. பத்மநாபன், எஸ். ஆர். இராதா, மற்றும் பலர்.

---

## காவேரிநகர் தி. மு. க.

### பணிமனைக்குச் சொந்த இடம்

காவேரிநகர் தி. மு. கழகத்திற்கும்—முன்னேற்றச் சங்கத்திற்குமான பணிமனைக்காகத் தலைமைக் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களின் பெயரில் ரூ 600-க்கு இடம் ஒன்று கிரயத்திற்கு வாங்கி, மேற்படி பத்திரத்தை 2—4—68 அன்று பதிவு அஞ்சல் மூலம் தலைமைக் கழகத்திற்கு அனுப்பியிருப்பதாக செயலாளர் எல். ஆதியப்பன் அறிவிக்கிறார்.

## சிதம்பரம் வழக்கறிஞர் மன்றம்

### தில்லை வில்லாளன் தலைவராகத் தேர்வு

சிதம்பரம், ஏப் 9—

சிதம்பரம் வழக்கறிஞர் மன்றத் தலைவராகத் தோழர் தில்லைவில்லாளன் எம்.பி. தேர்ந்தெடுக்கப் பட்டார்.

---

## காங்கிரசாரால் கை துண்டிக்கப்பட்ட கழகத் தோழர்

### புதுவை மருத்துவமனையில் என். வி. நடராசன் சந்தித்து ஆறுதல் கூறினார்

சாங்கிரசுக் கொலை வெறியர்களால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு வலது கரம் துண்டிக்கப் பட்டிருக்கும் சோரியங்குப்பம் கழகத் தோழர் கிருட்டினனை, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல் சி. அவர்கள் 9—4—68 மாலை 6-மணியளவில் புதுவை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

என். வி. என். அவர்களுடன் வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம், கழக வழக்கறிஞர் சி. பி. திருநாவுக்கரசு, சி. என். பார்த்தசாரதி ஆகியோரும் சென்றிருந்தனர்.

தோழர் கிருட்டினனின் உடலெங்கும் உள்ள ஆழமான பயங்கர வெட்டுக் காயங்களையும், துண்டிக்கப்பட்ட மொட்டைக் கரத்தினைத் தூக்கி அவர் வணக்கம் தெரிவித்த நிலையையும் கண்டு அனைவருமே அழுதுவிட்டனர்.

---

மேலவைத் தேர்தல்

## ஆசிரியப் பெருமக்களுக்கு வேண்டுகோள்

திண்டிவனம், ஏப் 14—

தென்னாற்காடு, மாவட்டத் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில், வழக்கறிஞர் டி. ஓ. எஸ். பாலன் அறிவிப்பதாவது :—

"வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்ட ஆசிரியர் தொகுதியிலிருந்து தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு 22—4—68 அன்று நடைபெறவிருக்கும் தேர்தலில் கழகச் சார்பில் போட்டியிடும் மதிப்புக்குரிய தோழர் ப. உ. சண்முகம் அவர்கட்கு வாக்களித்துச் சிறப்பான வெற்றியைத் தேடித் தருமாறு. ஆசிரியப் பெருமக்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்."

---

## அண்ணா விளக்கம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்ணா :—" அதன் முழுவிவரம் எனக்குத் தெரியாது ; அது ஒரு தொண்டர் படை ; 'சேனை, படை' என்பதெல்லாம், அந்தப் பொருள் தருவது அல்ல ! 'சாந்தி சேனை' என்று கூட வினோபாவைச் சேர்ந்தவர்கள் அமைத்திருக்கிறார்கள்; மேலும், இது, உள்ளூர் பிரச்சினை ; அரசியல் செயல் முறையோ, கட்சிச் செயல் முறையோ இதில் ஏதுமில்லை ; கட்சிக்கும் அதற்கும் சம்பந்தமில்லை; அந்த அமைப்பு தவறான வழியில் போனால், நிச்சயம் அதைத் தடுத்து நிறுத்துவேன்; ஏனெனில், அதில் ஈடுபட்டவர்கள் கட்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள்.

இந்தப் படை அமைப்பிற்கும்—மாணவர் நடவடிக்கைக்கும் ஏதும் சம்பந்தமில்லை ; அப்படி ஏதாவது தவறாக நடக்குமென்றால், அந்த அமைப்பைக் கலைக்க உத்தரவிடுவேன்.

தி. மு கழகமோ, இந்த அரசாங்கமோ இதுபோன்ற அமைப்புகளின் தயவில் இருக்கவேண்டிய அவசியமில்லை—தேவையுமில்லை."

### அவர்கள் என்ன செய்தனர்?

கேள்வி :—" அண்மையில் நடந்த சென்னை நிகழ்ச்சிகளுக்கு, 'நான் அதிகாரத்திலிருந்தால்—உயர் நீதிமன்ற நீதிபதியை விசாரிக்கும்படி உத்தரவிட்டிருப்பேன்' என்று சுப்பிரமணியம் பேசியிருக்கிறாரே !"

அண்ணா :—" திருப்பி அவரை நான் கேட்கிறேன் ; அவர் அதிகாரத்தில் இருந்தபோது முதுகுளத்தூர் கலவரம் பற்றி விசாரிக்க யாரை நியமித்தார் ? சென்னைத் துறைமுகத் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது யாரை நியமித்தார்கள் ? அண்ணாமலை நகரில் மாணவன சுடப்பட்டபோது யாரை நியமித்தார்கள் ? டில்லியில் சாமியார்கள் கலகம் நடந்து காமராசர் வீடு எரிக்கப்பட்டபோது எப்படிப்பட்ட நீதி விசாரணை நடந்தது ? சுப்பிரமணியம் அதிகாரத்திலிருந்தபோது, அருமையான சந்தாப்பங்கள் கிடைத்தபோது அவர் என்ன செய்தார் ?

இராஜாஜி அவர்கள்கூட, நான் விஷயத்தை எடுத்து விளக்கிய பின், இப்போது செய்யப்பட்டுள்ள ஏற்பாடு பற்றி முழுத் திருப்தியைத் தெரிவித்திருக்கிறார்.

நான் அந்த நிகழ்ச்சிகள் நடந்த பின், பேசாமலிருந்திருந்தால் 'நீதி விசாரணை தேவை' என்று கோரியிருப்பார்கள் ; அதுபற்றி எந்தக் கோரிக்கைகளும் வருவதற்கு முன்பே நானாகவே நீதி விசாரணை பற்றி அறிவித்ததால், 'ஏன் உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிக்கவில்லை' என்று கேட்கிறார்கள்."

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.